2018 ஜூலை 9]

துறைக்கென அரசு ஒதுக்குகின்ற நிதியில் இந்தெந்தப் பணிகள் மட்டும்தான் செய்ய வேண்டுமென்று வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த வகையிலே ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி சுற்றுலாப் பயணிகள் அதிகம்பேர் வருகின்ற காரணத்தினாலும், வைணவத் தலங்களிலே அற்புதமான தலம் என்பதாலும், இந்தத் திருக்கோயிலில் வந்து வேண்டுதல் செலுத்தினால் எல்லா காரியங்களும் நிறைவேறும் என்கின்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையின்படியும் சுற்றுலாத் துறை அலுவலர்களை அங்கு அனுப்பி, ஆய்வு செய்து அங்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்பட்சத்தில் என்னென்ன பணிகளை நிறைவேற்ற முடியுமோ, அவற்றையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதிநிலைக்கேற்ப நிச்சயம் பரிசீலிக்கப்படும், செய்து தரப்படும் என்கின்ற உறுதியை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

289—

E.S.I. மருத்துவமனை

***25826—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதி, கத்திவாக்கம் நகரத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தொழிலாளர் மாநிலக் காப்புறுதிக் கழகம் 2.0 திட்டத்தின்கீழ் மாவட்டம் முழுமைக்கான ஒருமுறை அறிக்கையை அரசு வெளியிடும்போது திருவொற்றியூர் தொகுதியிலுள்ள கத்திவாக்கம் பகுதியும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அப்பகுதியிலுள்ள தொழிலாளர்களும், அவர்களின் குடும்ப

உறுப்பினர்களும் பயன்பெறுவர். தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழக விதிமுறைகளின்படி 20 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒரு மருந்தகம் துவக்கப்படும். தற்போது திருவொற்றியூரில் 3 மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இயங்கி வருகின்றது. கத்திவாக்கம் பகுதி திருவொற்றியூர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திலிருந்து சுமார் 7.5 கிலோ மீட்டருக்குள் உள்ளதால் கத்திவாக்கத்தில் தனியாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமோ அல்லது மருத்துவமனையோ துவக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், எங்களை உருவாக்கிய தமிழினத்தின் தலைவர் அய்யா கலைஞர் அவர்களுக்கும், உன்னால் முடியும் தம்பி, உனக்குள் இருக்கும் உன்னை நம்பி என்று தமிழகத்தின் பட்டி தொட்டிகளெல்லாம் 'நமக்கு நாமே' திட்டத்தைத் துவக்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்த நாளைய தமிழகத்தின் முதல்வர், அண்ணன் தளபதி அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில், Eveready தொழிற்சாலை தொடங்கி Carborundum, Enfield, MRF, ITC, எண்ணூர் அனல் மின் நிலையம், Nicholas, Ashok Leyland, VP Foundry, Kothari, Parry என்று தொழிற்சாலைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். தமிழகத்திலே திருவொற்றியூர் தொகுதிதான் அதிகமான தொழிற்சாலைகளைக் கொண்ட தொகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே 3 மருத்துவர் வகை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் இயங்கி வருகின்றது என்று சொன்னார். அதிலே ஒன்றே ஒன்றுதான் இயங்குகிறது. அதிலேகூட சரியான முறையிலே மருத்துவர்கள் வருகை தருவதில்லை. நூற்றுக்கணக்கான சிறிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. கத்திவாக்கம் பகுதியிலே வரலாற்றுச் சிறப்புமிக்க பல தொழிற்சாலைகள் இருக்கின்ற காரணத்தால், இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பயன்பெறுகின்ற வகையிலே-தொழிலாளர்கள் நீண்ட நெடிய தூரம் வருகிறார்கள். அதேநேரத்திலே திருவொற்றியூருக்கு வந்து செல்வது. . .

2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேளுங்கள்.*

முற்பகல் 10–55

திரு. கே.பி.பி. சாமி: *மிகக் கடினமாக இருக்கின்ற காரணத்தால் கத்திவாக்கத்திலே* E.S.I. *மருத்துவமனையை உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது,* Eveready, MRF, Nicholas, Ashok Leyland, Parry *போன்ற பல தொழிற்சாலைகள் அவருடைய தொகுதியில் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஓர் இடத்தில் ஒரு* ESI *மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டுமென்றால், அந்த இடத்தில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட காப்பீட்டாளர்கள் இருக்க வேண்டுமென்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது, திருவள்ளூர் மாவட்டத்தில் 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அதாவது, கும்மிடிப்பூண்டி, மீஞ்சூர், பஞ்செட்டி, பூந்தமல்லி, ஆவடி, அம்பத்தூர், திருவள்ளூர், புழல் மற்றும் மணலி ஆகிய 9 இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னை அயனாவரத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் நடத்தப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனைகளில் கத்திவாக்கம் பகுதியிலுள்ள தொழிலாளர்கள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதைப்போல, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் திருவொற்றியூர் தொகுதியிலே, நிரந்தரத் தொழிலாளர்களாக,* contract *முறை–ஒப்பந்தத் தொழிலாளர்களாக, தினக்கூலிகளாக வேலை செய்து வருகின்றனர். தேவையான*

எண்ணிக்கையில் மருத்துவர்களோ, மருந்தாளுநர்களோ, அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் இல்லை. திருவொற்றியூரில் 4 மருத்துவமனைகள் இருந்தாலும், ஒரேயொரு மருத்துவர்தான் தினமும் வருகிறார். அவரும் சரியான முறையிலே வருவதில்லை. ஒரு நாளைக்கு 150 பேர், 200 பேர் என தொழிலாளர்கள் வரும்போது, அவர்களுக்கு உடனுக்குடன் மருத்துவம் பார்ப்பதற்கான வசதிகள் செய்யப்படுவதில்லை. சிறிய காயங்களை மட்டும் அந்த ஒரு மருத்துவர் பார்க்கிறார்; மற்றவர்கள் அனைவரும் அயனாவரத்திற்குத்தான் செல்கின்றனர். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான், திருவொற்றியூர் மண்டலம், திருவொற்றியூர், சென்னை–19, எண்ணூர், சென்னை–57, மணலி, சென்னை–68 என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எண்ணூருக்கு ஒரு தொழிலாளர் நல மருத்துவமனை மிகவும் அவசியமாகிறது. அந்த மருத்துவமனை, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் என்கின்ற வகையில், அதைக் கருத்தில்கொள்ள வேண்டும். திருவொற்றியூரில் அமைந்திருக்கின்ற தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் அடிப்படை வசதிகளான குடிதண்ணீர் இல்லை; கழிவறைகளில் சுத்தம் இல்லை; இரவில் காவலாளிகள் இல்லை என்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு செல்வது என்னவென்றால், அங்கே இருக்கின்ற அந்த மருத்துவமனையை நவீனப்படுத்துகின்ற வகையில், சுத்தப்படுத்துகின்ற வகையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி.பி. சாமி, நான் உங்களிடம் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்கச் சொல்லியும், நீங்கள் அவ்வாறு கேட்பதாகத் தெரியவில்லை. கேள்வியைக் கேட்டுக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? எவ்வளவு நேரம் ஆகிவிட்டது!

திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் சொல்லிவிடுகின்றேன். திருவொற்றியூரில் இருக்கின்ற அந்த மருத்துவமனையைச் சுத்தப்படுத்தி, தூய்மைப்படுத்தித் தர வேண்டும். அதேபோல, கத்திவாக்கத்தில் ஒரு மருத்துவமனையைத் தொடங்கினால், அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழிலாளர்கள் பயன்பெறுவர் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அங்கே இருக்கின்ற மருத்துவமனையில் சில வசதிகள் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். அதை துறை ரீதியாக ஆய்வு செய்து, முடிந்தால் நானே நேரடியாகச் சென்று, அந்த மருத்துவமனையைப் பார்வையிட்டு, என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ, அவை நிவர்த்தி செய்துதரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் அங்கிருக்கின்றார்கள் என்று கூறினார்கள். எத்தனை இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருந்தாலும், மத்திய அரசால் நடத்தப்படுகின்ற* ESIC, *அதாவது* ESI Corporation*–ல் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஐம்பதாயிரம் காப்பீட்டாளர்கள், அதாவது தொழிலாளர்கள்* ESI Corporation*–ல் பதிவு செய்திருந்தால்தான் மருத்துவமனை ஆரம்பிக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

290—

இ–சேவை மையங்கள்

***27470—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(*அ*) *மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் இ–சேவை மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(*ஆ*) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*